Mail received by email. Date: 12-7-2017 Time: 12:09pm

000109 N/c

அனுப்புநர்
வே.மு. அமுதவல்லி, இ.ஆ.ப.,
சமூக நல இயக்குநர்,
திரு.வி.க தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை–32.

பெறுநர்
1) மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து மாவட்டங்கள்
2) ஆணையர்,
சென்னை மாநகராட்சி,
சென்னை–3.

ந.க.எண் 20723 / ச.உ.தி 2 / 2017, நாள் 11.07.2017

அய்யா / அம்மையீர்,

பொருள் – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – 2018–19 ஆம் ஆண்டிற்கு சத்துணவு உண்ணும் பயனாளிகள் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வது – தொடர்பாக.

***********

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு, உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் இலவச மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு கல்வி ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையினை நிர்ணயம் செய்வதற்காக, வட்டார வளர்ச்சி அலுவலர்களால் செப்டம்பர் மாதத்தில் மூன்று முறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அடுத்த கல்வி ஆண்டிற்கு சராசரியாக இத்திட்டத்தின் கீழ் பயன்பெறப்போகும் பயனாளிகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் பயனாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறே, மத்திய அரசிடமிருந்து இத்திட்ட செயல்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடு கோரி பெறப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின் வரவு செலவு திட்ட மதிப்பீடு, இப்பயனாளிகளின் எண்ணிக்கையினை அடிப்படையாக கொண்டே ஒவ்வொரு ஆண்டும் திட்டமிடப்படுகிறது. எனவே, பயனாளிகளின் எண்ணிக்கையினை நிர்ணயம் செய்யும் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மிகுந்த கவனத்துடன் பணியினை மேற்கொள்ளுமாறு தகுந்த அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு வட்டார வளர்ச்சி அலுவலர்களால் நிர்ணயம் செய்யப்படும் பயனாளிகளின் எண்ணிக்கையினை அந்தந்த உதவி கல்வி அலுவலர்கள் / மாவட்ட கல்வி அலுவலர்களுடன் ஒத்திசைவு செய்து உறுதி செய்யப்படவேண்டும்.

மேற்காணும் நடைமுறையினை பின்பற்றியே, 2017–18 ஆம் கல்வி ஆண்டுக்கான சத்துணவு உண்ணும் பயனாளிகளின் எண்ணிக்கை மாவட்ட நிர்வாகத்தால் நிர்ணயம் செய்யப்பட்டது. இருப்பினும் தற்போது சத்துணவுத் திட்டத்தில் முட்டை உண்ணும் பயனாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதால், நிர்ணயம் செய்யப்பட்ட அனைத்து பயனாளிகளும் சத்துணவு உட்கொள்கிறார்களா என்ற ஐயப்பாடு எழுகின்றது. கல்வி உரிமைச்சட்டம் 2009ன் (Right to Education Act 2009) படி 1 முதல் 10ம் வகுப்பு வரை பள்ளிகளில் பயிலும் மதிய உணவுத் திட்டத்தில் உணவு உண்ண விரும்பிடும் அனைத்து குழந்தைகளையும் முழுமையாக இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2018–19ஆம் கல்வி ஆண்டிற்கு சத்துணவு உண்ணும் பயனாளிகள் எண்ணிக்கை நிர்ணயம் செய்யும் போது மேற்குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகளில் பயிலும் 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மதிய உணவுத் திட்டத்தில் உணவு உண்ண விரும்பிடும் அனைத்து குழந்தைகளையும் முழுமையாக இத்திட்டத்தின் கீழ் கொண்டு வர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பயனாளிகள் எண்ணிக்கை நிர்ணயம் செய்திட ஆய்வு மேற்கொள்ளவிருக்கும் நாட்களின் அட்டவணைகளையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு – படிவங்கள்

ஒம்/–வே. அமுதவல்லி
சமூக நல இயக்குநர்

// ஆணையின் படி //

சமூக நல இயக்குநருக்காக